மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 3

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்ட்ரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஜனவரி 2010**

| ஆண்டு சந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ.250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




## புத்தாண்டு வாழ்த்துக்கள்!



குன்றத்தூர் ஜெபவீடு
Thanks:
*Pr.Joseph Jabemony*



TVGM - 2010 ஜனவரி

கர்த்தரின் வாக்குத்தத்தம்

**அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்.**

மத்தேயு 25 : 21

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**Chief Executive Officer Letter Dated: 03.12. 2009**



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களுக்கு,

**TVGM, TASOL** சார்பில் என் அன்பின் **புத்தாண்டு வாழ்த்துக்களை** தெரிவித்துக் கொள்கிறேன்.

2010 புத்தாண்டு வாக்குத்தத்தத்தின் படியாக உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் **கர்த்தர் அநேகத்தின்மேல் அதிகாரியாக வைப்பராக!** ஆமென்.

2009ம் ஆண்டில் எத்தனையோ நன்மைகளை பெற்றோம். அதே நேரத்தில் யோபு கூறுவதுபோல, **நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ?** என்ற வசனத்தின்படி தீமையையும் சந்திக்க வேண்டியதிருந்தது.

ஆனாலும் **நாம் நிர்முலமாகாதிருப்பது தேவனுடைய கிருபையே.** இதற்காக தேவாதி தேவனை ஸ்தோத்தரிப்போம்.

2009ம் ஆண்டிலே TVGM மூலம் 18 ஆலயங்களை கட்டுவதற்கும் TVGM சிறுவர் இல்லம் மூன்றிலொரு பகுதி கட்டி முடிப்பதற்கும் தம்முடைய பிள்ளைகள் மூலம் பொருளாதார உதவிகளை கர்த்தர் எழுப்பினார்.

ஒவ்வொரு மாதமும் **100–கிராம ஊழியம்** தவறாமல் நடைபெற்றது. விசேஷமாக டிசம்பர் மாதத்தில் புதுக்கோட்டை பட்டணத்தில் 30,000 வீடுகளுக்கு **யோவான் சுவிசேஷம்** இலவசமாக வழங்க **பாஸ்டர் கைவல்யம் டேவிட்** குழுவினரை கர்த்தர் பயன்படுத்தினார்.

மேலும் இலங்கையிலும், ஒரிஸாவிலும், யூ.கே. யிலும் ஊழியங்களை நிறைவேற்ற கர்த்தர் கிருபை செய்தார்.

இவை அனைத்திற்கும் காரணம் உங்கள் ஜெபமும், உதவியுமே. கர்த்தர் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவாராக!

நீங்கள் குடும்பமாக, சபையாக கட்டாயமாக TVGM தலைமை அலுவலகம் திருச்சிக்கு நேரடியாக வந்து ஊழியங்களையும், சிறுவர் இல்லத்தையும், **கிறிஸ்தவ தலைமைத்துவ மைய நிலங்களையும்** பார்வையிட்டு, ஜெபித்து, ஆசீர்வதித்து செல்லும்படி அன்புடன் அழைக்கிறேன்.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்**

கிறிஸ்துவின் பணியில்,

ஸ்டீபன் கிறிஸ்டோபர்

**2010 புத்தாண்டு வாக்குத்தத்த செய்தி**

# அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். மத்.25:21

கிறிஸ்வுகருள் பிரியமான **'100 கிராம ஊழியம்'** பத்திரிக்கை வாசகர்களுக்கு TVGM சார்பில் எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2009ம் ஆண்டை முடித்து 2010க்குள் பிரவேசிக்கிற உங்களுக்கு தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம்:

**"அநேகத்தின்மேல், உன்னை அதிகாரியாக வைப்பேன்"**

இன்றைக்கு நீங்கள் **'ஒரு'** பொறுப்பில் இருக்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு **"கூடுதல் பொறுப்பும்" "கூடுதல் உயர்வும்"** காத்திருக்கிறது.

ஒருவேளை உங்களில் சிலருக்கு ஒரு பொறுப்புமே இல்லாமல் இருக்கலாம். நான் ஒரு அடிமை வேலைதான் செய்கிறேன் என நீங்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கலாம்.

ஆனால் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்கிற கர்த்தர் 2010ல் **"அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்"** என வாக்களிக்கிறார். அல்லேலுயா.

ஏனெனில் **மத்தேயு 20:25** கூறுகிறது **"புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் . . .**

**பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்து கிறார்கள்.**

ஆதலால் என் அன்பு தேவ ஊழியரே, விசுவாசியே **2010ல்** உங்களுக்கு ஒரு **தரிசனம் தேவை.** ஏனெனில்,

**புறஜாதியாருடைய அதிகாரிகள் இறுமாப்பாய் ஆளுகிறார்கள் . . .**

**பெரியவர்கள் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள்.**

ஆதலால் **இறுமாப்பான ஆளுகை மாற வேண்டும்,**

மேலும் **பெரியவர்களின் கடினமான அதிகாரம் மாற வேண்டும்.**

**1. இறுமாப்பான ஆளுகை**

**2. கடினமான அதிகாரம்.**

**மத்தேயு 28:18** ல் இயேசு கூறுகிறார்: **" வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது."** என்பதாக.

முதலாவது ஒரு உண்மையை அறிந்துகொள்ள வேண்டும். அதாவது **"சகல அதிகாரமும் உடையவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே"** ஆமென்!

இந்த உலகத்திலே ஒருவருக்கும் சகல அதிகாரமும் கொடுக்கப்படவில்லை.

பிதாவாகிய தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய **இயேசு கிறிஸ்துவுக்கு மட்டுமே சகல அதிகாரத்தையும்** கொடுத்தார். கைதட்டி அல்லேலுயாயா கூறுங்கள் ஆமென்.

ஆதலால் தான் **இயேசுகிறிஸ்துவை "சர்வ வல்லவர்"** என்று அழைக்கிறோம்.

**ரோமர் 13:1**
**தேவனாலேயன்றி**
**ஒரு அதிகாரமுமில்லை,**
**உண்டாயிருக்கிற அதிகாரங்கள்**
**தேவனாலே**
**நியமிக்கப்பட்டிருக்கிறது.**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறிந்திருக்க வேண்டிய ஒரு உண்மை

**"தேவனாலேயன்றி**
**ஒரு அதிகாரமுமில்லை"**

இந்த தேவன் தம்முடைய அதிகாரத்தை இரண்டு விதத்தில் மனிதர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார்.

1. **அரசியல்வாதிகள்**
2. **அதிகாரிகள்.**

இந்த இரண்டு பேருமே ஒன்றுக் கொன்று தொடர்பு உடையவர்கள்.

சில நேரங்களில் அரசியல்வாதிகள் அதிகாரிகளை மேற்கொள்ளுகிறார்கள்.

சில நேரங்களில் அதிகாரிகள், அரசியல்வாதிகளை மேற்கொள்ளு கிறார்கள்.

இவர்கள் இரண்டு பேருக்கும் மத்தியில் நிற்பவர்கள் தான் நீதிபதிகள்.

இதே நேரத்தில் மற்றொரு காரியத்தை உங்களுக்கு எழுதுகிறேன். ஒரு மாவட்டத்திலுள்ள மூன்று அதிகாரிகள் ஒருமனப்பட்டால் எந்த காரியத்தையும் செய்யமுடியும்.

மாவட்ட நீதிபதி, மாவட்ட கலெக்டர், மாவட்ட போலீஸ் அதிகாரி.

பரிசுத்த வேதாகமும் திரியேக தேவனைத்தான் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவரும் ஒன்றாயிருக் கிறார்கள் என கூறுகிறது. ஆனாலும் மூன்று பேரும் இணைந்து,

**சகல அதிகாரத்தையும் இயேசு கிறிஸ்துவின் கரத்தில் ஒப்புக் கொடுத்துள்ளார்கள்.**

இதைப் போலத்தான், சகலமும் அதிகாரிகள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்று புறஜாதியா ருடைய அதிகாரிகள் இறுமாப்பாய் ஆளுகிறார்கள்.

இதை முதலாவது நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

எதிரியின் பெலத்தை அறிந்தால் தான், நாம் அவர்களை மேற்கொள்ள முடியும்.

**நீதி 11:10** "நீதிமான்கள் நன்றாயிருந்தால் பட்டணம் களிகூறும்; துன்மார்க்கன் அழிந்தால் கெம்பீரம் உண்டாகும்".

அதிகாரங்கள்– இரட்சிக்கப் பட்டவர்கள் கையில் வரவேண்டும். அப்படியானால் நம்முடைய பிள்ளைகள் **முதலாவது கர்த்தருக்குள் வளர வேண்டும்.**

**இரண்டாவது அதிகாரிகளாக வரவேண்டும்.**

கிறிஸ்தவன் என்ற பெயரை வைத்துக்கொண்டு, கிறிஸ்து இல்லாமல் அதிகாரத்தை வைத்திருப்ப வர்கள் மனமாற்றம் பெறவேண்டும்.

**உண்மை கிறிஸ்தவர்களின் கரத்தில் அதிகாரங்கள் வரவேண்டும்.** இந்த தரிசனத்தை நிறைவேற்ற இனிமேல் எழும்ப வேண்டியது உங்கள் பிள்ளைகள் தான்.

**தாயின் வயிற்றில் பிள்ளை இருக்கும்போதே என்னுடைய பிள்ளை கிறிஸ்தவ அதிகாரியாக அல்லது தேசத்தை ஆளுகிறவர் களாக வர வேண்டுமென ஜெபிக்க ஆரம்பித்து விடுங்கள். இதுவே உங்கள் தரிசனமாகட்டும்.**

**“அதிகாரம்”** – என்று கூறும்பொழுது ஆவிக்குரிய அதிகாரத்தையும் எப்பொழுதும் நினைத்துக் கொள்ளுங்கள்.

**லூக்கா 10:19** இயேசு கூறுகிறார்:

**இதோ, சர்ப்பங்களையும்
தேள்களையும் மிதிக்கவும்,
சத்துருவினுடைய சகல
வல்லமையையும்
மேற்கொள்ளவும் உங்களுக்கு
அதிகாரம் கொடுக்கிறேன்;**

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்குமே அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது உதாரணமாக **1கொரி 7:4**

மனைவியானவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி.

எந்த தொழிலைச் செய்தாலும், வியாபாரத்தைச் செய்தாலும், விவசாயம் செய்தாலும், கூலி வேலை செய்தாலும்கூட அங்கேயும் ஒரு அதிகாரம் இருக்கிறது.

ஆனாலும், **தேசத்தை நல்வழிப்படுத்துகிற, மேலும் சுவிசேஷமயமாக்குகிற உயர்ந்த அதிகாரத்தை** உங்களுடைய பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார்.

**“அநேகத்தின் மேல் உன்னை
அதிகாரியாக வைப்பேன்”**

இதற்கு அடிப்படை தேவை **கல்விதான்.**

**ஒவ்வொரு பெற்றோருக்கும்** பிள்ளைகள் பற்றிய கவலைகளில் ஒன்று: **படிப்பும், வேலையும் ஆகும்.**

பொதுவாக பிள்ளைகளை என்ன படிக்க வைக்கப் போகிறீர்கள் என்று கேட்டால் **இஞ்சினியர் அல்லது டாக்டர்** என்பதே ஆகும். ஏனெனில் இந்த படிப்புக்குதான் நிறைய சம்பளம் கிடைக்கும் வேலை வாய்ப்பு அதிகம் என கூறுவார்கள்.

**என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே** நம்முடைய தேசம் சுவிசேஷ மயமாக்கப்படவேண்டுமென்றால்

**இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவ அதிகாரிகள் பெருக வேண்டும். ஆட்சியில் அமர வேண்டும்.**

இன்றைக்கே ஒரு தீர்மானம் எடுப்பீர்களா ? என்னுடைய பிள்ளைகள் **கலெக்டராக** வரவேண்டும் அல்லது **நீதிபதியாக** வர வேண்டும் அல்லது **போலீஸ் அதிகாரியாக** வரவேண்டும் என்பதாக.

தேசத்தில் எழுப்புதல் வருவதற்கு நீங்களும், உங்கள் பிள்ளைகளும் கிறிஸ்தவ அதிகாரிகளாகவும், தேசத்தை ஆளுகை செய்கிறவர் களாகவும் வர வேண்டும்.

**2010ல் தேவன் வாக்களிக்கிறார்:**

**“அநேகத்தின் மேல் உன்னை
அதிகாரியாக வைப்பேன்”**

உங்கள் **விசுவாசத்தை** பின்வருமாறு மீண்டும் மீண்டுமாக **அறிக்கை செய்யுங்கள்.**

**( கர்த்தர் ) அநேகத்தின்மேல்
என்னை அதிகாரியாக வைப்பார்.
( கர்த்தர் ) அநேகத்தின்மேல்
என் பிள்ளைகளை
அதிகாரியாக வைப்பார்.
( கர்த்தர் ) அநேகத்தின்மேல்
என் குடும்பத்தை
அதிகாரியாக வைப்பார்.** ஆமென்.

**அவர் உமது மன விருப்பத்தின்படி
உமக்குத் தந்தருளி, உமது
ஆலோசனைகளையெல்லாம்
நிறைவேற்றுவாராக.சங் 20 :4**

✷ தேவனுக்கே மகிமை! ✷

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று. 2 தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

# காஞ்சிபுரம் - உத்திரமேரூர் யூனியன் 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2010 ஜனவரி 18** திங்கள் காலை 9 மணி முதல் **ஜனவரி 22** வெள்ளி இரவு 10 மணி முடிய **காஞ்சிபுரம் – உத்திரமேரூர் யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 ஜனவரி 18** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2010 ஜனவரி 22** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2010 ஜனவரி 18 - 22 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**பெனியேல் சர்ச்**
**107, மெயின் ரோடு,**
**எடமச்சி கிராமம்,**
**பொற்பந்தல் போஸ்ட், சாலவாக்கம் வழி,**
**உத்திரமேரூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்.**
**செல்: 99437 05069**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த Pr.**ஜேக்கப் செல்லமுத்து** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# விருதுநகர் - ராஜபாளையம் யூனியன்
# 100 - கிராம ஊழிய அறிக்கை

**தேதி : 16.11.2009 முதல் 20.11.2009 முடிய**



கர்த்தருடைய கிருபையால் விருதுநகர் – ராஜபாளையம் யூனியனில் 16.11.2009 முதல் 20.11.2009 வரை **"100 கிராம ஊழியம்"** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல்நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு மற்றும் பார்சல் செலவுகளை ராஜபாளையம் **சாலேம் அசெம்பிளி சர்ச் பாஸ்டர். ஆபிரகாம்** பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் 11 மாவட்டங்களிலிருந்து 52 கிராம ஊழியர்கள் 5 நாட்கள் கிராமங்களில் தங்கி ஊழியம் செய்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் ராஜபாளையம் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் சிங்கப்பூர் **பாஸ்டர் டேனியல்,** அவரது மனைவி மற்றும் உறவினர்கள் கலந்துகொண்டு, பாரத்தோடு ஜெபித்து தேவசெய்தி கொடுத்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். TVGM ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் ஜெபத்தில் நடத்தினார்கள். திருச்சி **ஆடிட்டர் ஜான் ராஜசேகரன்** ஊழியம் செய்ய போகும் கிராமங்களுக்காக, கிராம ஊழியர்களுக்காக ஜெபித்தார்கள். பின்பு ஊழியர்கள் 12 குழுவாக பிரிந்து, தாங்கள் ஊழியம் செய்யப் போகும் கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். மதிய உணவிற்கு பிறகு கிராமங்களுக்குள் சென்று, வீடுவீடாக யோவான் சுவிசேஷம், கைப்பிரதி, சிலுவைக் கொடிகள் இலவசமாக கொடுத்து **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்து ஊழியம் செய்தார்கள்.






5 நாட்கள் ஊழியங்களை முடித்து, கிராமங்களில் கர்த்தர் தங்களை எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் **பாஸ்டர் ஆபிரகாம்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். மொத்தம் **12,070 யோவான் புத்தகங்கள், 20,000 இயேசுவே இரட்சகர் கைப்பிரதிகள், 10,000 சிலுவைக் கொடிகள்** வழங்கப்பட்டன. 179 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து வேதபாடங்கள் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு:1 சகோதரி கஸ்தூரி,மேரிமீனா, மரியாள், அன்னாள்.**

MPK புதுப்பட்டி, மம்சாபுரம், இடையன்குளம், கோதைநாச்சியார்புரம் ஆகிய கிராமங்களில் சென்று வீடுவீடாக யோவான் புத்தகம் கொடுத்து, சுவிசேஷம் அறிவித்தோம். யாவரும் அன்புடன் வாங்கிக் கொண்டார்கள். நோயாளிகளை சந்தித்து ஜெபித்தோம். மொத்தம் 1155 யோவான் புத்தகங்கள், 725 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:2 சகோதரி ராணி சந்திரா, தெபோராள், செல்லக்கனி, குளோரி.**

நாங்கள் சென்ற 10 கிராமங்களிலும் அநேக வீடுகளில் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் இரட்சிப் பிற்காக ஜெபித்தோம். நாங்கள் தங்கியி ருந்த வீட்டில் எஸ்தர் என்ற சகோதரி கர்ப்பமாக இருந்தாள். 1 மாத காலமாக இரவில் தூக்கம் வராமல், சாப்பிட முடியாமல் மிகவும் கஷ்டபடுகிறாள் என அவளுடைய தாய், தகப்பன் ஜெபிக்கக் கூறினார்கள். நாங்கள் பாரத்தோடு ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அந்த சகோதரி நன்றாக தூங்கவும், சாப்பிடவும் கிருபை செய்தார். அவள் பெற்றோர் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். மொத்தம் 1000 யோவான் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:3 சகோதரி டோரா லாசர், அந்தோணிமேரி, அமிர்தம், ஷீலா, வெரோணிக்கம்.**

நாங்கள் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை கூறின போது அநேகர் பணிவோடு புத்தகத்தை வாங்கி, சத்தியத்தைக் கேட்டார்கள். ஒரு வாலிப பெண்ணிடம் சுவிசேஷம் சொன்ன போது அவள் எல்லா சாமிகளையும் வணங்கி விட்டேன். உங்கசாமி இயேசு ஒன்று தான் குறை என்றாள். வியாதியுள்ள மக்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1500 யோவான் புத்தகங்கள், 930 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:4 சகோதரி எஸ்தர், செலின், பிச்சையம்மாள், தேவபாக்கியம்.**

தொம்பக்குளம் ஊராட்சியிலுள்ள 11 கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து, சுவிசேஷத்தை அறிவித்தோம். யாவரும் அன்புடன் வாங்கிக் கொண்டு, சத்தியத்தைக் கேட்டார்கள். மொத்தம் 775 யோவான் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:5 பாஸ்டர் ஆல்வின், சகோ. மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், மகாராஜன்.**

முதுகுடி, வடகரை, தென்கரை, ராமலிங்கபுரம் ஆகிய கிராமங்களில் வீடுகள் தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்தோம். பிரச்சனை உள்ளவர்க ளுக்காக ஜெபித்தோம். மொத்தம் 750 யோவான் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:6 சகோதரி மணியம்மாள், லீதியாள்,தேவகிருபை, சலோமிசம்மனசு**

சேத்தூர் ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சென்று வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். நாங்கள் தங்கியிருந்த வீட்டில் ஒவ்வொரு நாளும் இரவில் ஜெபக்கூட்டம் நடத்தின போது, அநேகர் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டு, ஜெபித்து சென்றார்கள். வியாதியஸ்தர்களுக்காக எண்ணெய் பூசி ஜெபித்தோம். மொத்தம் 740 யோவான் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:7 சகோ.பிரேம் ஆனந்த், ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், செல்வராஜ், சிவக்குமார்.**

செட்டியார்பட்டி, கொம்மந்தபுரம் கிராமங்களில் ஒருவர் இது RSS உள்ள பகுதி. இங்கு இது மாதிரி புத்தகம் கொடுத்தால் பிரச்சனை வரும். போலீசில் சொல்லி உங்களை தூக்கிக் கொண்டு போய் விடுவார்கள். உங்கள் மதப் பிரச்சாரத்தை முஸ்லீம் தெருவுக்கு போய் செய்யுங்கள் என்றார். நாங்கள் அவரிடமே முஸ்லீம் தெரு எங்கு இருக்கிறது கேட்டு நடந்து சென்றோம். மொத்தம் 900 யோவான் புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:8 சகோ.எபிநேசர், யோசுவா, ஸ்டீபன்ராஜ், இஸ்தாக்கி.**

நாங்கள் சென்ற 11 கிராமங்களில் வீடுகள் தோறும் யோவான் புத்தகம் கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். எல்லோரும் இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டார்கள். ஜெபிக்கக் கேட்ட சிலருக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷ புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:9 சகோ.பாபு சாலமோன், சூசைமாணிக்கம், நோவா, அந்தோணி, தாவீது.**

மாலையாபுரத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, ஒருவர் புத்தகத்தை வாங்கிய பிறகு நான் ஒரு இந்து என்று தெரியாதா என்று சொல்லி புத்தகத்தை தூக்கி வீசி எரிந்தார். நாங்கள் அதை எடுத்துக் கொண்டு வேறு பகுதிக்கு சென்றார். அநேகர் விருப்பத் துடன் வாங்கினார்கள். சிலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். வீரதர்மாபுரத்தில் நாய்கள் ஊழியம் செய்ய விடாதபடி குலைத்தன.ஆனாலும் கர்த்தர் காத்தார். மொத்தம் 1300 யோவான் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:10 சகோதரி மரியம்மாள், ரூத், அபியேல், கிருபா, ரெபேக்கா.**

நாங்கள் ஒரு முஸ்லீம் தெருவில் யோவான் புத்தகம் கொடுத்தபோது, சில வாலிபர்கள் வந்து இது முஸ்லீம் தெரு என்று உங்களுக்கு தெரியாதா? ஏன் இங்கு வந்தீர்கள், போய் விடுங்கள் என்று விரட்டினார்கள். மாடசாமி புரத்தில் ராஜாக்கள் கோட்டை வழியாக செல்லும் போது, சிலர் வந்து எங்கு போகிறீர்கள் இது இந்துக்கள் வசிக்கும் பகுதி உங்களை போலீசில் பிடித்துக் கொடுப்போம். போய் விடுங்கள் என்று விரட்டினார்கள். இவர்களுக்காக ஜெபித்து கடந்து போனோம். 1000 யோவான் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு:11 சகோதரி வசந்தா,அன்னக்கிளி, மனோரஞ்சிதம், கிளமெண்ட்ஸ்மேரி**

கம்மாபட்டி, மங்காபுரம் கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, சிலர் வேண்டாம் என்றார்கள். ஒரு சிலர் வாங்கினார்கள். கம்மாபட்டியில் யோவான் புத்தகம் கொடுக்கக் கூடாது என்று விரட்டினார்கள். இந்து வைராக்கியமுள்ள மக்கள் எங்களை இழிவாகப் பேசினார்கள். நாங்கள் வேறு கிராமத்திற்கு சென்று தொடர்ந்து ஊழியம் செய்தோம். மொத்தம் 950 யோவான் புத்தகங்கள், 900 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு:12 சகோதரி சாந்தி,கிரேஸ் பத்மா, ஜோதிமணி, லூயிஸ் அம்மாள்.**

முகவூரில் ஊழியம் செய்தபோது ஒரு சகோதரன் எங்கள் எல்லோரையும் உங்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றி விடுவீர்கள் போல தோன்றுகிறதே என்றார். சொக்கநாதன்புத்தூரில் ஒரு R.C. தெருவில் சுவிசேஷம் சொன்னபோது ஒருவர் நீங்கள் பெந்தெகோஸ்தே காரர்கள். உங்களை எங்கள் தெருவில் வர அனுமதிக்க மாட்டோம். ஏனெனில் எங்கள் R.C. தெருவில் உள்ள அநேக மக்களை பெந்தேகோஸ்தே சபையில் சேர்த்து

விட்டார்கள். எங்கள் கோவிலில் இப்போது ஆட்களே இல்லை. ஆகையால் எங்கள் சாமியார் உங்களைப் போன்றவர்களை வரக்கூடாது, கைப்பிரதிகளை வாங்கக் கூடாது என்று சொல்லி உள்ளார். ஆகவே போய் விடுங்கள் என்று விரட்டினார்கள். மொத்தம் 1000 யோவான் புத்தகங்கள், 715 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**நன்றி!**

*2009ம் ஆண்டில் தியாகத்தோடு கிராமங்களில் நடந்து, திரிந்து ஊழியம் செய்த 100-கிராம ஊழிய தன்னார்வத் தொண்டர்களுக்கும், 100-கிராம ஊழியத்திற்கு உதவி செய்த யூனியன் பாஸ்டர்கள் மற்றும் சபை மக்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக!*

**2010 ஜனவரி மாத இயேசுவை விரும்புவோம் முகாம்**

**மாவட்டம் :** இராம்நாடு
**யூனியன் :** கமுதி
**நாள் :** 09.01.2010 சனி
**நேரம் :** காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் எபிநேசர் அய்யாத்துரை**
**ஏ.ஜி.சர்ச்.**
**கோட்டைமேடு,**
**யூனியன் ஆபிஸ் பின்புறம்,**
**கமுதி - 623 604.**
**இராமநாதபுரம் மாவட்டம்.**
போன் : **04576 - 223932**
செல் : **99654 78092**

**கர்த்தரைத் துதியுங்கள்!**

கர்த்தருடைய கிருபையினால் 28.11.2009 அன்று திருவிடைமருதூர் யூனியன் - பெரேயா ஜெபவீட்டில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது. இதில் 8 பேர் ஆர்வமுடன் கலந்துகொண்டார்கள். இயேசுவின் அன்பை பற்றி கூறியபோது, வாஞ்சையுடன் ஏற்றுக்கொண்டு இயேசுவுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தார்கள்.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & புத்தாண்டு வாக்குத்தத்த தேவசெய்தி

அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன். மத். 25:21

**நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை**

| | |
|---|---|
| **நாள் :** **31.12.2009** வியாழன் | **நாள் :** **01.01.2010** வெள்ளி |
| **நேரம் :** 7PM முதல் 12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

**நடைபெறும் இடம்**

**TVGM தலைமை அலுவலகம்,**
**100 - கிராமம்,**
**திருச்சி - 620 102.**

**புத்தாண்டு வாக்குத்தத்தம் மற்றும் தேவஆசீர்வாதத்தை பெற்றுச் செல்ல யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்!**

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

## ஜெபத்திற்காக கடிதம் எழுதிய பிள்ளைகள் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதங்கள் இதோ!

1. **சகோ. ஜான்சன், மார்த்தாண்டம்.**
நான் பணநஷ்டம் ஏற்பட்டு மிகுந்த கலக்கத்தோடு இருந்த சமயத்தில் **'100–கிராம ஊழியம்'** பத்திரிக்கை கிடைத்தது. அதில் **'உனக்கு நன்மை செய்வேன்'** என்ற வசனம் இருந்தது. உடனே உங்களுக்கு கடிதம் எழுதினேன். மகனுக்கு பாஸ்போர்ட் எமிகிரேசன் லஞ்சம் இல்லாமல் கிடைக்கவும், மஸ்கட் செல்லவும் கர்த்தர் கிருபை செய்தார்.

2. **சகோதரி பெல்லா, மார்த்தாண்டம்.**
எனது B.Ed.ரிசல்ட்டுக்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் First Class-ல் பாஸ் பண்ண கிருபை செய்தார்.

3. **சகோதரி ஜெசில்லா, தூத்துக்குடி.**
என் மாமாவின் முதுகுப் பகுதியிலுள்ள கட்டி குணமாகவும், அண்ணனுக்கு கிட்னியிலுள்ள கல் குணமாகவும் கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் இருவருக்கும் நல்ல சுகத்தைக் கொடுத்தார்.

4. **சகோ. அன்பழகன், வேலூர்.**
என்னுடைய வீடு பிரதிஷ்டைக்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். மழை இருந்தது. ஜெபித்தோம். விழா முடியும் வரை மழை இல்லை. தேவனுக்கே மகிமை.

5. **சகோதரி பானுபிரியா, புதுகை.**
என் அக்காவின் படிப்பிற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு தேர்வில் வெற்றியைக் கொடுத்தார்.

6. **சகோதரி ரம்யா, புதுக்கோட்டை.**
கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு என் அண்ணிக்கு சுகபிரசவத்தில் ஆண்குழந்தையை தந்தார்.

7. **சகோதரி சீதாலட்சுமி, திருப்பத்தூர்.**
என் மருமகளுக்கு எந்த சிரமமும் இல்லாமல் சுகபிரசவத்தில் பெண் குழந்தை பிறந்துள்ளது. அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

8. **சகோதரி ஹரிபிரியா, திருச்சி.**
என் அண்ணனுக்காக ஜெபிக்க எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு வேலையை கொடுத்தார்.

9. **சகோ. அனிஸ், கன்னியாகுமரி.**
நான் +2 தேர்வில் School First வந்தால் சாட்சி எழுதுவதாக ஜெபித்தேன். கர்த்தர் 1086 மதிப்பெண்கள் பெற்று School First வர கிருபை செய்தார்.

## உங்கள் பிறந்த நாள், திருமணநாளை தெரியப்படுத்துங்கள்!

தங்கள் பிறந்தநாள் மற்றும் திருமண நாட்களை எங்களுக்கு எழுதுபவர் களுக்கு வாக்குத்தத்த வேதவசனத் துடன் கூடிய வாழ்த்துக்கடிதம் ஒன்று அனுப்புகிறோம். மேலும் அந்நாளில் காலை 9 .00 மணிக்கு TVGM தலைமை அலுவலகத்தில் விசேஷத்த ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. இன்றே உங்கள் பிறந்தநாள் மற்றும் திருமணநாளை தெரியப்படுத்துங்கள். ஜெபிக்கிறோம்!

# இலங்கையை நேசியுங்கள்!
# இலங்கைக்காக ஜெபியுங்கள்!

## சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர் வவுனியா ஊழியங்கள்
## நாள் : நவம்பர் 1 முதல் 5 வரை

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்** இலங்கை பயணத்தின்போது, 2009 நவம்பர் 2ம் தேதி **எம்மாவுஸ் சுவிசேஷ சபையில்** தேவசெய்தி கொடுத்தார். மேலும் நீர்கொழும்பிலுள்ள சில குடும்பங்களை சந்தித்து ஜெபித்தார்.

2009 நவம்பர் 4ம் தேதி வவுனியாவில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட ஜனங்களை பார்வையிட்டார். **பால் பவுடரும், பிஸ்கட்களும்** பம்மமேடு மருத்துவமனையிலுள்ள 140 பேருக்கு வழங்கினார்.

மேலும் அருணாச்சலம் முகாமிலுள்ள திரு.சேவியர் குடும்பத்தை சந்தித்து, ஜெபித்து உணவுப்பொருள் வழங்கினார். அவருடைய மனைவிக்கு தன்னுடைய மகளை இழந்ததினால் மூளைக்கோளாறு ஏற்பட்டுள்ளது. அவர் தனது மனைவி மற்றும் மூத்த மகளுடன் இந்த முகாமில் கடந்த 8 மாதங்களாக ஜீவித்து வருகிறார். இவர்களுக்காகவும் மற்றும் முகாமிலுள்ளவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.






**இலங்கை முகாம்களில் குடும்பத்தை விட்டு பிரிந்து தனிமையில் வாடும் மக்களுக்காகவும், யுத்தத்தில் காயப்பட்டு கை, கால் இழந்த மக்களுக்காகவும். பசியினால் வாடும் மக்களுக்காகவும் ஜெபியுங்கள். இவர்கள் மேல் கரிசனை கொண்டு செயல்படும் தன்னார்வத் தொண்டர்களோடு ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

# 2009ல் TVGM ஊழியங்கள் மூலம் ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்த தேவாதி தேவனைத் துதியுங்கள்!

## 1. 100–கிராம ஊழியம்:–

கர்த்தருடைய கிருபையினால் 2009ம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 11 யூனியன்களில் வெவ்வேறு கிறிஸ்தவ சபைகளை மையமாக வைத்து **100–கிராம ஊழியம்** தடையில்லாமல் நடைபெற்றது. இந்த ஊழியத்தின் போது 1,23,581 யோவான் சுவிசேஷப் புத்தகங்களும்,2,10,000 கைப்பிரதிகளும், 1,08,500 சிலுவைக் கொடிகளும் கிராமங்களில் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் செப்டம்பர் மாதத்தில் முதலூரை சுற்றிலுள்ள பகுதியில் விசேஷ சுவிசேஷப் பணி செய்யவும், நவம்பர் மாதத்தில் புதுக்கோட்டை பட்டணத்தில் 30,000 வீடுகளுக்கு யோவான் சுவிசேஷம் வழங்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## 2. பின்தொடர்பணி ஊழியம்:–

**100 கிராம ஊழியத்தின்போது** சந்தித்த 1936 புறமத நண்பர்களுக்கு தபால் மூலம் வேதபாடங்கள் அனுப்பப்பட்டது. இதில் 104 பேர் வாஞ்சையோடு தொடர்பு கொண்டு அடுத்தடுத்து வேதபாடங்களை பெற்று படித்து வருகிறார்கள்.

## 3. இயேசுவை விரும்புவோர் முகாம்:–

100 கிராம ஊழியம் நடைபெற்ற இடங்களில் அதைத் தொடர்ந்து இயேசுவை விரும்புவோர் முகாம் நடைபெற்றது. இதன் மூலம் 48 புறமத நண்பர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இயேசுவின் நாமம் புறமதநண்பர்கள் மூலம் மகிமைப்பட்டது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

## 4. ஆலயமில்லாத கிராமங்களில் ஜெபவீடு கட்டுதல்:–

2009ம் ஆண்டில் நெய்தலூர் காலனி, அக்ரஹாரம், பொன்மலைப்பட்டி, சூரைக்குடிப்பட்டி, ஜெயங்கொண்டம், பெருவளநல்லூர், எடமலைப்பட்டிபுதூர், செட்டியூரணிப்பட்டி, கடவூர், M.அழகாபுரி, கோவில்பட்டி, பஞ்சம்பட்டி, நந்தவனப்பட்டி, தொட்டியம், குரோம்பேட்டை, தேவநேசன்நகர், பொழிச்சலூர், வேந்தன்பட்டி ஆகிய ஆலயமில்லாத 18 கிராமங்களில் ஜெபவீடுகள் கட்டி தேவனுடைய நாம மகிமைக் கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்காக தேவனைத் துதியுங்கள்.

## 5. சிறுவர் இல்லம்:–

திருச்சி மற்றும் குண்டல் சிறுவர் இல்லத்திலுள்ள 66 பிள்ளைகளையும் கர்த்தர் இந்த ஆண்டு முழுவதும் கிருபையாக பாதுகாத்து, தேவைகளையெல்லாம் அற்புதமாக சந்தித்தார். விசேஷமாக திருச்சி சிறுவர் இல்லத்திற்கென்று புதியதாக ஒரு சொந்த கட்டிடத்தை கட்டும்படியாக கர்த்தர் கிருபை செய்தார்.

## 6. கடித ஊழியங்கள்:–

2009ம் ஆண்டில் ஜெபத்திற்காக கடிதம் எழுதியிருந்த 2000க்கும் மேற்பட்ட விசுவாசிகள் மற்றும் புறமதநண்பர்களுக்கு தலைமை அலுவலகத்திலிருந்து பதில் கடிதம் அனுப்பப்பட்டது. அநேகர் ஆறுதலடைந்தனர். தேவனைத் துதியுங்கள்.

### 7. தரிசன முகாம்:-

2009 ஏப்ரல் 4 ம் தேதி நாகர்கோவில் – பிலிப்ஸ்புரம் சி.எஸ்.ஐ. ஆலயத்தில் TVGM தரிசனமுகாம் நடத்த கர்த்தர் கிருபை செய்தார். இந்த முகாமிலே தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

### 8. கலிலேயா முகாம்:-

2009 அக்டோபர் 2,3,4 ஆகிய தினங்களில் கோடாவிளையில் கலிலேயா முகாம் நடத்த கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலம் அந்த சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இதற்காக தேவனை துதியுங்கள்.

### 9. பத்திரிக்கை ஊழியம்:-

2009ம் ஆண்டில் 12 மாதங்களும் தடையில்லாமல் **"100–கிராம ஊழியம், தமிழ் கிராமங்களுக்கு சுவிசேஷம்"** ஆகிய இரண்டு பத்திரிக்கைகளும் வெளிவர கர்த்தர் கிருபை செய்தார். தேவைகளை அற்புதமாக சந்தித்தார். பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது.

### 10. அறிமுகப்பணி ஊழியங்கள்:-

2009ம் ஆண்டு நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலக சகோதரிகளுக்கு அநேக புதிய சபைகளில் அறிமுகப்பணி செய்யும் வாய்ப்புகளை கர்த்தரே ஏற்படுத்திக் கொடுத்தார். மேலும் சங்கரன்புதுரை சுற்றியுள்ள 7 கிராமங்களிலும் மற்றும் மாங்குளம், பத்மநாயன்புதூர், குறண்டி போன்ற கிராமங்களிலும் வீடுகள்தோறும் லூக்கா சுவிசேஷ புத்தகம் கொடுத்து ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

### டி.வி.ஜி.எம். சமூக சேவை:-

**ஒரிஸாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி :** 2009 பிப்ரவரி மாதத்தில் ஒரிஸாவில் துன்பப்படுத்தப்பட்ட சில கிராமங்களுக்கு சென்று அதில் 2 கிராமங்களில் 82 குடும்பங்கள் மற்றும் 51 போதகர்களுக்கு அரிசி வழங்கும்படியாக கர்த்தர் கிருபை செய்தார்.

**யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி :** 2009 செப்டம்பர் மற்றும் நவம்பர் மாதத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு இலங்கை – வவுனியா மருத்துவனையிலுள்ள மக்களுக்கு சிறு சிறு உதவிகள் செய்ய கர்த்தர் கிருபை செய்தார்.

**தொழுநோயாளர்கள், விதவைகள், பார்வையற்றோர் உதவி :**

2009 ம் ஆண்டில் திருச்சி – பஞ்சப்பூரிலுள்ள தொழுநோயாளர்களுக்கும், சூறாவளிப்பட்டியிலுள்ள ஏழை விதவைகளுக்கும், காந்திநகர் பகுதியிலுள்ள பார்வையற்றோருக்கும் அவ்வப்போது உணவுப்பொருட்கள் மற்றும் சிறுஉதவிகள் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

இப்படியாக 2009 ஆண்டு முழுவதும் கர்த்தர் தமது ஊழியங்களை நிறைவேற்ற எங்களுக்கு கிருபைக் கொடுத்தார். **தேவனுக்கே மகிமை!**

**TVGM ஊழியங்களுக்காக ஜெபித்த, கொடுத்த, உழைத்த யாவருக்கும் நன்றி**
**2010 ஆம் ஆண்டிலும் உங்கள் ஜெபமும், ஆதரவும் எங்களுக்கு தேவை!**

**கர்த்தருக்கு மகிமையை செலுத்துங்கள்;**
**கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்!**

# பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனி சமூக கூடாரம் / ஆராதனை மையம்

கர்த்தருக்குச் சித்தமானால் 2010ம் ஆண்டில் **திருச்சி – பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனி**யில் ஏழை, எளிய மக்களுக்கு TVGM மூலம் மருத்துவ வசதி மற்றும் உணவு பொருள் வழங்க சமூக கூடாரம் அமைக்கவும் ஞாயிறுதோறும் ஆராதனை நடத்தவும் வாஞ்சிக்கிறோம்.

இந்த கூடாரம் அமைக்க உத்தேசமாக ரூ.2 லட்சம் தேவைப்படும் என எதிர்பார்க்கிறோம். ஆனாலும் கர்த்தர் நமக்கு கொடுக்கிற உதவித் தொகை அளவின்படி கட்ட வாஞ்சிக்கிறோம். ஜெபியுங்கள்.

தொழுநோயாளர் காலனியில் வசிக்கும் அநேக ஏழைகள் சிறு கைத்தொழில் அமைத்து தரும்படி சிறுசிறு உதவிகள் கேட்கிறார்கள். இதைக் குறித்தும் ஆலோசித்து ஜெபித்து வருகிறோம்.

மேலும் வாரந்தோறும் பஞ்சப்பூரில் ஜெபம் நடத்த போதகர் திருச்சியிலிருந்து தேவைப்படுகிறார்கள். கர்த்தருக்காக, மனப்பூர்வமாக தங்கள் ஊழியமாக சேவை செய்ய ஒரு கர்த்தருடைய பிள்ளை தேவை.



**கடந்த மாதங்களில் பஞ்சப்பூரில் ஆராதித்து வரும் TVGM கூடாரம்.**



**2010 ல் தொழுநோயாளர் காலனியில் புதிதாக நாம் கட்டப்போகும் இடம்**

## 100–கிராம ஊழியம் மாதாந்திரப் பத்திரிக்கை

ஆண்டுசந்தா இந்தியா – ரூ.25 வெளிநாடு ரூ.250

2010ம் ஆண்டிற்கு உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக TVGM உடன் தபால் மூலமாகவோ அல்லது காணிக்கை மூலமாக எந்தவித தொடர்பும் இல்லாதவர்களுக்கு 2010 ஏப்ரல் **1** முதல் **100–கிராம ஊழிய மாதாந்திர பத்திரிக்கை** அனுப்புவதை நிறுத்துகிறோம் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறுபடியும் தபால் எழுதினவுடன் அனுப்பி வைக்கிறோம்.

## தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** நம் தேசத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட அநேக கிறிஸ்தவ அதிகாரிகளையும், ஆளுநர்களையும் கர்த்தர் கிருபையாக எழுப்ப ஜெபியுங்கள்.

இந்த தரிசனத்தை நிறைவேற்ற கர்த்தர் TVGM-க்கு கொடுத்த **கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்** (TASOL Project ) க்கு 15 ஏக்கர் நிலம் வாங்க பொருளாதார வாசல் திறக்கப்பட கருத்தாய் ஜெபியுங்கள்.

***செவ்வாய்:*** TVGM ஊழியத்திற்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற அநேக பரிசுத்தவான்களை, ஜெபவீரர் களை கர்த்தர் கிருபையாக எழுப்ப ஜெபியுங்கள்.

அவர்களுடைய குடும்பத்தில் அநேக அற்புதம், அதிசயம் நடைபெற ஜெபியுங்கள்.

***புதன்:*** TVGM – ஊழியத்தின் மூலம் தகுதியான அநேக கிராம ஊழியர்களுக்கு **ஜெபவீடு** கட்டி கொடுக்கப்படவும், அவர்களுடைய சபை நன்கு வளர்ச்சி பெறவும், ஒவ்வொரு சபையிலுமிருந்து முழு நேர ஊழியர்கள் எழும்பவும் ஜெபியுங்கள்.

***வியாழன்:*** TVGM, TASOL Project கமிட்டி உறுப்பினர்களுக்காகவும், ஒழுங்கு முறைகளுக்காகவும், தரிசனம் பெற்ற வர்கள் இணைந்து கொள்ளவும் ஜெபியுங்கள்.

அலுவலக சேவைக்கும், அறிமுகப் பணிக்கும் தேவையான, தகுதியான, தாலந்துள்ள கர்த்தருடைய பிள்ளைகள் தானாக முன்வர ஜெபியுங்கள்.

***வெள்ளி:*** ஒரிஸாவில் 5 ஆலயங்கள் கட்ட வாஞ்சிக்கிறோம். தகுதியான இடங்களை கர்த்தர் காட்டும்படி ஜெபியுங்கள்.

ஒரிஸாவில் TVGM Centre அமைக்க சொந்த இடத்தை கர்த்தர் கொடுக்கவும், தரிசனம் பெற்றவர்கள் பொறுப்பாளர்களாக கிடைக்கவும், OVGM ஊழியங்களுக்காகவும் கருத்தாய் ஜெபியுங்கள்.

***சனி:*** இலங்கை ஊழியங்களுக்காகவும் SLVGM காரியதரிசி பாஸ்டர் ஜான் ஐசாயா, சகோதரி டப்னி அவர்களின் சரீர சுகபெலத்திற்காகவும், ஊழியங்களுக் காகவும் மற்றும் மகள் சூசன்னா, மகன் ஜாஷ்வா ஆகியோரின் வேதாகம கல்லூரி படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** நாகர்கோவில் TVGM – அறிமுகப்பணி அலுவலகம் ஒருங்கி ணைப்பாளர், உடன் ஊழியர்களுக் காகவும், தேவைப்படும் ஆம்னி வேன் மற்றும் சொந்த கட்டிடம் ஆகியவற் றிற்காக ஜெபியுங்கள்.

குண்டல் சிறுவர் இல்லத்திற்காகவும் திரு. ரத்தினம் ஆசிரியர் மேனேஜர் குடும்பத்திற்காகவும் மற்றும் திரு.மனோகர் குடும்பத்திற்காகவும், சிறுவர் இல்ல வார்டன்களுக்காகவும் ஜெபியுங்கள்.

TVGM – தலைமை அலுவலகத்தில் சேவை செய்பவர்களுக்காகவும், 100– கிராம ஊழிய தொண்டர்களுக்காகவும், அறிமுகப்பணியாளர்களுக்காகவும் தேவாதி தேவனைத் துதியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

**TVGM தலைமை அலுவலக முகவரி**

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-

**MR.STEPHEN CHRISTOPHER,**
**MANAGING DIRECTOR.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**"100 - VILLAGE"**
**SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org

*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், **'100 கிராம ஊழியம்'** அறிக்கை, மாதாந்திர வாக்குத்தத்த செய்தி மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு**
**டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( 80G வரிவிலக்கு உண்டு )
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

( அல்லது )

MR. STEPHEN CHRISTOPHER,
SB 12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.
**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

**Return Request**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

# கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்



**பாஸ்டர் ஜோசப் ஜெபமணி, சகோ.வின்சென்ட்ராஜ், மார்டின்** 25.10.2009 அன்று **'கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்'** அமைக்க வாங்க விரும்பும் நிலத்தை பார்வையிட்டு ஜெபித்தார்கள்.





**பாஸ்டர் டேனியல் ராஜ் ( ஏலீம் சபை போதகர் )** 13.11.2009 அன்று நிலம் வாங்க வைத்திருந்த **அட்வான்ஸ் ரூ.50,000/-க்காகவும்,** நில உரிமையாளர்களுக்காகவும் ஜெபித்தார்கள்.

**கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்**
**நிலத்தின் விலை ரூ. 15 லட்சம்**
கடைசி தவணை நாள் : **13.02.2009**

**கர்த்தருக்குச் சித்தமானவர்களை கொண்டு,**
**நிலம் வாங்கப்பட ஜெபியுங்கள்.**
**5 லட்சம் கொடுக்கக் கூடிய 3 தேவபிள்ளைகள் தேவை**
**( அல்லது )**
**1 லட்சம் கொடுக்கக் கூடிய 15 தேவபிள்ளைகள் தேவை**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி